Deposition of Witness Page.No.
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE KATPADI

Case No CC. 224/2015

Deposition of Witness for PW4

Name : சுரேந்திரபாபு

Father's Name : செல்வம்

Village : காட்பாடி

Occupation : மென்பொருள் நிறுவனம்

Age : 30

Solemnly affirmed in accordance with the provisions of Sec 3 and 4 of the Indian Oaths Act 1969 r/w rule 35,36 of Criminal rules of practice 2019. 12.12.2022

---

சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து குளோபல் எல்த்கேர் மென்பொருள் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த ரமேஷ் என்பவர் எனது நண்பர் ஆவார். கடந்த 07.08.2014 ஆம் தேதி காலை 9.10 மணிக்கு சன்பீம் பள்ளியின் வேகத்தடை அருகே எனது நண்பர்கள் மேற்படி ரமேஷ் என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்ட மற்றொரு நண்பரான விக்னேஷ் பின்னால் அமர்ந்து சென்றுக் கொண்டிருந்போது, முன்னால் சென்ற லாரியை ஓவர்டேக் செய்ய இடது பக்கமாக முந்தியபோது எதிரில் வந்த சைக்கிள் மீது மோதாமல் இருக்க இருசக்கர வாகனத்தை வலது புறம் சாய்வாக ஓட்டினார். அப்போது இருவரும் நிலைதடுமாறி கீழே விழுந்தார்கள். விக்னேஷ் இடதுபுறமாக விழுந்ததால் காயமின்றி தப்பினார். இருசக்கர வாகனத்தை ஓட்டிய ரமேஷ் வலப்புறமாக விழுந்தபோது மேற்படி லாரியின் பின் சக்கரத்தில் தலை சிக்கி விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டார். மேற்படி லாரியை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். பிறகு ஆம்புலன்ஸ் முலம் உயிரிழந்த ரமேஷை மருத்துவமனை அழைத்துச் சென்றார்கள். விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை – எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH